உ

# ஞானோதயம்

ஞானம் 01 சுபானு ௵ கார்த்திகை ௴ (8-11-2003) உதயம் 06



கார்த்திகை 2003 அன்பளிப்பு: ரூபா 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை - மகாதனை

# நரசிங்க வயிரவர்



மகாதனை நரசிங்க வயிரவப்பெருமானுடைய கும்பாபிஷேகதினம் 06. 11. 2003 வியாழன் ஆகும். அத்தினத்தை முன்னிட்டு அப்பெருமானைப் பற்றி நினைவு கூருதல சிறந்ததாகும். ஒரு நூற்றாண்டிற்கு மேலாக இவ்வாலயம இயங்கி வருகின்றது. மிகவும் பழமை வாய்ந்த இந்த நரசிங்க வயிரவர் ஆலயம தெய்வீகம் நிறைந்தது. வயிரவப் பெருமான் ஓர அருள் மூர்த்தம். இக்கிராம வாசிகள சிறந்த கல்விமான்களாகவும், அரசாங்க உத்தியோகத்தராகவும வளங்கி வருகின்றார்கள். கிராம மக்களின் பிரதான தொழில் விவசாயமே.

இவர்கள் அனைவரும வயிரவப்பெருமானிடம் மிகுந்த பக்தி பூண்டவர்கள். எக்காரியத்தை ஆரம்பிக்குமபோதும வயிரவப் பெருமானை வழிபட்டே தொடங்குவார்கள்.

இன்று இக்கிராமத்தைச் சோந்தவர்கள் வெவ்வேறு இடங்களிலும் வசிக்கிறார்கள. ஆயினும் முக்கிய தினங்களில் ஆலயத்துக்கு வரத் தவறமாட்டார்கள்.

மேற்படி ஆலயத்திற்கு முதலில் பூசை நிகழ்த்தியவர் எமது பேரனார் முத்துக்குமாரசாமிகுருக்கள் ஆவார். அவர் காலத்திலே நடந்த குமபாபிஷேகத்தன் பின் தந்தையார் பூசகராகவும் ஆதீனகர்த்தராகவும் விளங்கினார். அவா காலததிலே இரு கும்பாபிஷேகங்கள் நிகழ்ந்தன. அதன்மேல் யான் பொறுப்பு ஏற்றபின்பு மும்முறை கும்பாபிஷேகங்கள் நிகழ்நதுள்ளன.

மகாதனையில் வசிக்கும் சைவமக்கள் ஒன்றுகூடி ஆலயம் சிறப்படைய வகை செய்ய வேண்டும். இக் கிராமத்தில் வசிக்கும் இளைஞர்கள் வாலிப சங்க மூலம் ஆலயத்துக்கு வேண்டிய திருப்பணிகளை நிறைவு செய்ய வேண்டும. வயிரவப்பெருமான் அனைவருக்கும் எல்லா நலன்களையும் அருளவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் தியாகராஜஐயர் சுந்தரமூர்த்திஐயர்

இவர் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இளமையிலே ஆரம்ப பாடசாலையில் ஆரம்பக்கல்வி பயின்றார். அதன்மேல் மகாஜனாக்கல்லூரியில் உயர்கல்வி கற்றார். அதன்பின் ஆசிரிய கலாசாலையில் பயின்று ஆசிரியதராதரமும் பெற்றார். பல இசைமேதைகளிடம் இசையும் பயின்று இசையில் பாண்டித்தியம் பெற்றார். ஆசிரியப்பணியை மேற்கொண்ட இப்பெருமகன் பேரனாரால் ஸ்தாபிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், மகாஜனக்கல்லூரியிலும் கல்வி கற்பித்தார். அத்துடன் மாணவர்களுக்கு இசைப்பயிற்சியும் அளித்து வந்தார்.

ஆசிரியராகப் பணிபுரிந்த இவர் தனது குடும்பம், மனைவி மக்கள் ஆகியோரையும் நன்கு பராமரித்து வந்தார். தனது பிள்ளைகளைப் பாடசாலைகளில் கல்வி பயில வைத்துத் திறமைசாலிகள் ஆக்கினார். அதனமேல் தனது பிள்ளைகளுக்குத் திருமணங்கள் செய்து வைத்து அவர்களுக்கு வெவ்வேறு இல்லங்களும் அமைத்துக் கொடுத்தார். அது மாத்திரமன்றி மூத்த மகனுக்கு ஆசாரி அபிஷேகம் செய்து வைத்துச் சிறந்த குருக்களாகப் பிரகாசிக்கச் செய்தார்.

சிறந்த சங்கீத ஞானம் மிக்க இசையாசிரியராகத் திகழ்ந்த இவர் வயலின் வாசிப்பதிலும் மிகுந்த ஆற்றலுடன் திகழ்ந்தார். அஞ்ஞான்று இந்தியாவிலிருந்து இங்கு வந்து கதாப்பிரசங்கம் நிகழ்த்திய மகாமேதை கிருபானந்தவாரியார் அவர்களுக்கு வயலின் வாசித்து அன்னாரது பாராட்டையும் பெற்றார். எமது தலைமையனராகத் திகழ்ந்த இப்பெருமகன், பாலர் ஞானோதயசபை இசைக்கல்லூரிக்கும் இவரது சேவை நிறைந்த பலனைக் கொடுத்தது. ஆசிரியர்கள் இல்லாதபோது தாமே மாணவர்களுக்கு இலவசமாக இசைபயிற்றுவித்துப் பரீட்சைகளில் சித்திபெற வைத்தார்.

தெல்லிமாநகரிலே அருஞ்சேவை செய்த அந்தணர்கள் பலர் இருந்தார்கள். அவர்களுள் ஒருவராக இவர் விளங்கினார். தன்னலங் கருதாது பல பொதுப்பணிகளிலே ஈடுபட்டு அரியசேவைகள் பல புரிந்தார். ஐக்கிய நாணய சங்கத்தின் செயலாளராகப் பல ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பணிபுரிந்து அதனை வளர்த்தார். அந்தணர்களது இல்லங்களில் இடம்பெறும் வைபவங்களில் பங்கு கொண்டு அவற்றைச் சிறப்பித்து வைத்த பெருமைக்குரியவர் இப்பெருந்தகை. இவரது சேவைகளோ அளவிட்டுக் கூற முடியாது. அந்தணர் குலத்துக்கே ஒருமணி விளக்காகத் திகழ்ந்தார். யாருடனும் அன்பாகவே பேசுவார் எவருக்கும் உதவி செய்யத்தயங்க மாட்டார், நேர்மை தவறமாட்டார், நேர்மைக்கு மாறாக நடப்பவர்களுடன் சேரமாட்டார். தாம் ஆசிரியராக இருந்தபோதிலும் கோயிற்பூசைகள் நிகழ்த்தவோ அல்லது சிரார்த்தம் முதலாய கிரிகைகளைச் செய்யவோ தயங்க மாட்டார்.

இத்தகைய சிறந்த சேவையாளராக விளங்கிய அந்தணப் பெருமகன் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக இவ்வுலகை விட்டுச் சென்றுவிட்டார். சைவ உலகம் சுந்தரமூர்த்தி ஐயாவின் பணிகளை மதித்துப் போற்ற வேண்டியது பெருங் கடனாக அமைந்துள்ளது.

''அந்தண ரெனபோர் அறவோர்
மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலால்''

மகாதனை - வயிரவர்

# திருவூஞ்சல்

## காப்பு

சொல்ல வரும் ஓங்கார சொரூபியாகிச்
சுகானந்த மதமாரி சொரிந்து நின்று
அல்லலுறும் அன்பரிடம் அகற்றி யாளும்
ஐங்கரனார் பொற்பாதத் தன்பு செய்து
தெல்லி மகாதனை கோணா சிமாமேய
தெய்வ நரசிங்க வைரவர் மேலூஞ்சல்
எல்லவரும் இசைபாடி இனிதி னேத்தி
இகபர வாழ்வெலா மெய்த ஏத்துவாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்

மிகு நாத வட்டமதே விட்டமாக
விளங்கு கதிர் இரண்டுமிரு வளையமாக
தகு நேமிவரை ஒருபால் தூணமாக
தக்கமறை சங்கிலியா வுயிரின் கூட்டத்
தொகை பலகை யதுவாக வானமாதர்
தொட்டசைக்க நடுவிலிருந்து தொன்மைபோல
நகுநெல்லி மகாதனை கோணா சீமாவின்
நரசிங்க வைரவரே ஆடீரூஞ்சல். 1


அயனுடனே அரியுமயல் வடந் தொட்டாட்ட
ஆறுமுகன் மடியணைந்தே யன்போ டாட்ட
வயக்கரிமா முகக்கடவுள் களிவே ஆட்ட
வந்தனைசெய் காளி மகிழ்வாகி யாட்ட
வியத்தகு மெம் வீரபத்ரவேள் பாங்காட்ட
மெந்துயர்தீர் விமலைமொடு தாய் நின்றாட்ட
நயத்தகு சீர் நந்தருளுங் கோணாசீமா
நரசிங்க வயிரவரே யாடீருஞ்சல். 2

இந்திரனார் வருணனியற றனிநீர் வாங்க
இயக்கனடை தரநிருத பணிசுகம் தாங்க
சந்திரனாவிரவி வட்டம் தளாநந்தே வீச
சதாகதி ருத்திரர் விசிறு கவரிவீச
மந்திரங்கள் மாமறைகள் வாழ்த்து மல்க
மறலியனல் வாள்சூலம வாங்கிக் காக்க
நந்தலிலா வண்ண மருள் கோணாசீமா
நரசிங்க வயிரவரே யாடீருஞ்சல். 3

கற்ற பெரும் பயனாகிக் கண்ணுமாகிக்
கற்பகத்தின் கனியாகிக் காதலாகி
நிற்குநினை தானாகி நெஞ்சி னுள்ளே
நின்மலவா னந்தமுறு நிறைவு மாகி
பற்றற்ற பரவெளியாய்ப் பரந்து நின்று
பார்க்குமிடந் தொறும் விளங்கும் பரமேயாகும்
நற்றெல்லி மகாதனை கோணா சீமத்து
நரசிங்க வயிரவரே யாடீருஞ்சல். 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரமஸ்ரீ தி. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரசிவன் திருமகனே பரிவினோடும்
பாகாளி மகிழ்ந்து நின்றுபார்வை செய்ய
அரகர வென்றடியார் பலர் அருகில் நின்று
அணிமலர்கள் பலசொரிந்து அகமே மல்க
புரந்தரனும் அயன்மாலும் புலவர் தாமும்
போற்றி செய்தே துதித்து மகிழ்வெய்துகின்ற
வரத்தெல்லி மகாதனை கோணா சிமாவின்
நரசிங்க வயிரவரே யாடீரூஞ்சல். 5

அந்தணர்கள் மறைபாட அவர்தந் தூய
வருமகளிர் பொற்கவரி யங்கை வீச
வந்தடியார் சங்கொலிப்ப முரசந் தன்னின்
ஒலிகூடி வணைகூலி விண்ணனி லேற
உந்தை சிவன் தாயுமையாள் வந்துநின்று
ஆடவடிவு காண சராசரங்க ளோங்க
நற் செதலவி மகாதனைகோ ணாசிமாவின்
நரசிங்க வயிரவரே யாடீரூஞ்சல். 6

துடிமுழவு தண்ணுமைகள் துளங்கி யார்ப்ப
தூயமெவாலிக் கருவிகளும துவன்றி யார்ப்ப
கடிமுரசம மத்தளங்கள் வொநதே யார்ப்ப
கரயபயிலெக காளமது குதித்தே யார்ப்ப
நொடிசவரி குடவளையும நுஞுகி யார்ப்ப
நுடங்கு பலவித வொலிகள் நுவன்றே யார்ப்ப
அடிபரவிப் பணியவரான கோணாசியா
நரசிங்க வயிரவரே யாடீரூஞ்சல். 7

சயத் துர்க்கையொடு மறைசேர் மகளிராட
சராசரங்கள தாழாமல் தழுவியாட
நியமத்தில வழாதுயிர்கள் நேர்ந் தேயாட
நிலவு மிரவை டறமிருபால் நிலைத்தேயாட
மயக்கறவே வேத சிவாகமங் களாட
மணமெல்லா மானந்தம் மருவியாட
நவத்செதலவி மகாதனை கோண சிமாவின்
நரசிங்க வயிரவரே யாடீரூஞ்சல். 8

காளி வயிரவ காரி! யாடீரூஞ்சல்
கருங் குதிரை யாளி முத்த! யாடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானியனே! சூலதர! வாடீருஞ்சல்
நலத் தமிழுக் குரியோனே! யாடீருஞ்சல்
மீளி! விறற்பிள்ளை! சித்த! வாடீருஞ்சல்
விழை பவளச் சடைவடிக யாடீருஞ்சல்
ஆளி வளஞ்செறி கோணா சீமாமேய
நரசிங்க வயிரவரே யாடீருஞ்சல். 9

வடை மாலை புனைபவனே! யாடீருஞ்சல்
வாகைதர வருபவனே யாடீருஞ்சல்
அடைகாய் தீம்பழவமுதம் ர்த்தா யூஞ்சல்
அதிரச மோதக முறுக்கு மமர்ந்தாங் ஊஞ்சல்
கிடையாத பொருள்பலவும் தருவா யூஞ்சல்
கேட்டையா வகைகாக்கும் கிழவா ஊஞ்சல்
நடை யுயர்வே நல்கியிடுங் கோணாசிமா
நரசிங்க வைரவரே யாடீருஞ்சல் 10

பலசெல்வக் கன்றினொடு பசுவும் வாழி!
பசியமா முகில் பொழிந்து பரவிவாழி!
நிலைத்து வேதாகமங்கள் நிலவிவாழி!
நிகழரசின் துறையனைத்தும் நெறியில் வாழி!
கலைத்திருவார் நாவலர்கள் களிந்துவாழி!
கவின் மறையோர் மரபென்றும் கலந்துவாழி!
நலத்தெல்லி மகாதனை கோணா சீமாவின்
நரசிங்க வயிரவரே வாழி! வாழி! 11

---

# சைவசமயப் பொது அறிவு

(சென்ற முறை வெளியான வினாக்களுக்கு விடைகள்)

1. அறிதற்கு கருவி - அறிவின் இருப்பிடம் என பொருள் கொள்வர்.
2. சுருதி, நிகமம், ஆம்நாயம், சுயம்பு, எழுதாமறை, அபௌருடேயம்
3. இருக்கு, யசுர், சாமம், அதர்வம்.
4. வேதவியாசர்.
5. கருமகாண்டம், ஞானகாண்டம்.
6. மண் – காஞ்சி, நீர் – திருவானைக்கா, தீ – திருவண்ணாமலை காற்று – திருக்காளத்தி, ஆகாயம் – சிதம்பரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. சித்திரசபை - திருக்குற்றாலம், தாமிரசபை - திருநெல்வேலி, வெள்ளியம்பலம் - திருவாலவாய், பொன்னம்பலம் - சிதம்பரம்

8. இராமாயணம், மகாபாரதம், சிவரகசியம்.

9. இப்படி முன் இருந்தது என பொருள் தரும்.

10. மகாபாரதம்.

# வினாக்கொத்து - 5

1. தரிசனம் என்பதன் பொருள் யாது?

2. ஆகமம் என்பதன் பொருள் யாது?

3. மூலாகமங்கள் எத்தனை?

4. சைவசமயத்தின் முதல் நூல்கள் எவை?

5. சைவசமயத்தைக் குறிக்கும் வேறுபெயர்கள் சில தருக?

6. வன்தொண்டன் என அழைக்கப்படுபவர் யார்?

7. பெரிய புராணத்தின் மறு பெயர் என்ன?

8. சித்தார்த்த சாத்திரங்கள் எத்தனை?

9. சித்தாந்த சாத்திரங்களின் மறுபெயர் என்ன?

10. திருமுறைகள் எத்தனை?

(விடைகள் அடுத்த இதழில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணபதியை தினம்பணிந்து பாடு

எடுப்பு

கணபதியின் தாள்பணிந்து பாடு — உந்தன்
குணம்மிகுந்து கவலைமறைந் தோடும்
(கண

தொடுப்பு

இனியவடி வேல்முருகன் கந்தன் — அன்று
இனியவள்ளி கரமபிடிக்கச் செய்தான்
(அந்த

முடிப்பு

நித்தமவன் புகழ் பாடி வணங்கிட
நிம்மதி கூடுமம்மா — மனச்
சஞ்சலம் தீருமம்மா
எத்தர் பயம்நீங்கி எத்திசையு மவன்
அருளொளி காட்டுமம்மா — நல்ல
வழித்துணை யாருமம்மா
சித்தமதில் நிந்தம் வாட்டும் கவலைகள்
ஓடி மறையுமம்மா — ஐயன்
திருவருள கூடுமமமா
வித்தை நலமோங்கும் வீரகணபதி
வெற்றி தருவானம்மா — அவன் திருப்
பாதம் பணியுமம்மா.

ச. குகதேவன்
தெல்லிப்பழை

இச்சஞ்சிகை தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் சார்பில், அதன் தலைவர் திரு. சி. கணேசலிங்கக் குருக்கள் அவர்களால், மானிப்பாய் சௌந்தரம் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org